1973 நவம்பர் 24]

இருப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா? இல்லாவிட்டால் ஒரு பேஷண்ட் இருக்கிற வரையிலும் இன்னொரு பேஷண்ட் அங்கே அட்மிட் பண்ண முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அதற்குப் பரிகாரம் காண அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது தொடர்பு உள்ள கேள்விதான் என்று சொன்னாலும் தனியான பிரச்னை. இதையெல்லாம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் பரிசிலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால் அதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

ஆரோவில் நகரமைப்புக்கு உதவி

*** 365 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுவை மாநிலம் பாண்டிச்சேரி அருகே ஆரோவில் நகரம் அமையப்பெற நமது அரசினரிடம் உதவி ஏதேனும் கோரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உதவி கேட்கப்படவில்லை.

திருச்சிராப்பள்ளி-கரூர் நெடுஞ்சாலை

*** 366 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-கூடலூர் நெடுஞ்சாலையில் திருச்சிராப்பள்ளிக்கும் கரூருக்கும் இடையிலுள்ள பாதையை விரிவுபடுத்தி நேர்படுத்தும் (straightening) திட்டம் ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது இது குறித்து பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நிதி நிலைமை, வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை பொறுத்து பழுது பார்ப்பதற்காக ஒதுக்கப்படும் தொகையின் கீழ் இவ்வேலை எடுத்துக் கொள்ளப்படும்.

[1973 நவம்பர் 24

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : நமது நாட்டில் மிகுந்த நெரிசல் அதிக போக்குவரத்துள்ள நாகப்பட்டினம்—கடலூர் நெடுஞ்சாலே திருச்சி—கரூருக்கு இடையே பல அதிகமான வளைவுகளைக் கொண்டதாயும் இடையே கோவில்கள், விசேஷ ஸ்தலங்கள் குறுக்கிடுவதாகவும் இருக்கிறது. அதனுல் எக்ஸ்பிரஸ் பஸ் போன்ற வாகனங்கள் வேகமாகச் செல்ல முடியாது. குறிப்பாக குளித்தலே நகரத்திற்கு உள்ளே செல்வதால் ரோடில் நெருக்கடி ஏற்பட்டு பல விபத்துக்கள் ஏற்படக்கூடிய ஆபத்துகள் இருக்கின்றன. ஆகவே, குளித்தலே போன்ற ஊரில் பை-பாஸ் ரோடுகளே அமைப்பதற்கும், ரோடுகளில் இருக்கிற வளைவுகளை நேர்படுத்தவும் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா? அதற்கான திட்டம் பற்றி ஏதேனும் செயற்குறிப்பு உண்டாக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அது போன்ற இடங்களில் கொஞ்சம் மெதுவாகப் போனுல் ஆபத்து குறைவாக இருக்கும். அங்கத்தினர் அவர்கள் சொன்னதெல்லாம் உண்மை தான் என்று அரசு கருதினுலும், நிதி நிலேமை சரியான பிறகு அந்த வேலேகளே எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கரூர்—திருச்சி இடையிலே பெட்டவாத்தலேக்கு மேற்குப் பக்கத்தில் ஒரு குறுகிய பாலம் இருப்பதன் காரணமாக அடிக்கடி பல விபத்துகள் ஏற்படுகின்றன. . . .

மாண்புமிகு பேரவைத் தலேவர் : இந்தக் கேள்வி நாகை—கடலூர் நெடுஞ்சாலே பற்றியது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதுவும் அதற்குத் தொடர்புடையது தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்திருக்கக் கூடும். முதலில் இதையாவது நேர் பாலமாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றி அரசுக்கு எழுதி அனுப்பினுல் அரசு ஆலோசிக்கும்.